1995 மார்ச் 16]

ஆகவே, தஞ்சாவூர் பகுதியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு உண்டான செயற்குறிப்பு தற்போது இல்லை. அது சம்பந்தமாக அந்தச் செயற்குறிப்பை விரிவாக, விளக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரவேண்டும் என்றும், அதை அரசு பரிசீலிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

32—

காட்டுமன்னார் கோயில் நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுதல்

*** 36396**—*திரு. என்.ஆர். ராஜேந்திரன் :*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் எங்கள் பகுதியில் வீடு கட்டுவோர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக கடன்கள் வழங்கப்பட்டு சிறப்பாக பணிகள் நடந்து வருகின்றன. மேலும் எங்கள் பகுதியில் அடிக்கடி வெள்ளம் பாதித்து வருகிறது. தெருக்கள் ஒழுங்காக இல்லாமலும், மேடு பள்ளம் நிறைந்த பகுதியாகவும் காட்சி அளிக்கிற அந்த வெள்ளப் பகுதியில், காட்டுமன்னார் கோவில் பேரூராட்சிக்கு உட்பட்ட பிடாரி தெரு, காந்தியார் தெருவில் வசிப்போர் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மாற்றி அமைக்க இந்த ஆண்டு சிறப்பு திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் நகர பஞ்சாயத்து பகுதிக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் இன்னும் விரிவுபடுத்தப்படவில்லை. காட்டுமன்னார்கோவில் நகர பஞ்சாயத்து பகுதிக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய பணிகள் விரிவுபடுத்துகின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய பணிகள் இந்தப்பகுதிக்கு விரிவுபடுத்தப்பட்டால் அப்போது முதல் கட்டமாக குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளும், அதற்குப் பின்னால் வீடுகள் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

33—

பவானிசாகர் தொகுதியில் புதிதாகத் தொழிற்பேட்டைகள் துவங்குதல்

*** 35907**—*திரு. வி. கே. சின்னசாமி:*

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நம்பியூர், புளியம்பட்டி ஆகிய பகுதிகளில் புதிதாகத் தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டுக்கும் இல்லை என்று சொல்கின்றார். அது ஏன் இல்லை. என்ன காரணத்தினால் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? மேலும் நாங்கள் இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். இப்படி பதில் சொல்லிவிட்டார்களே, என்ன காரணத்தினால் இல்லை என்பதை